ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2430/16 - 2025 අප්‍රේල් මස 01 වැනි අඟහරුවාදා - 2025.04.01
2430/16 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டம்

1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டத்தின் கீழ் பீடிக்கான வரியொன்றினை விதித்தல்

திருத்தப்பட்டவாறான 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், பின்வரும் கட்டளையினை பிரகடனப்படுத்துகின்றேன்.

1. 2022, திசெம்பர் 31 ஆந் திகதிய 2312/71 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "பீடிக்கான புகையிலை வரி விதிப்பதற்கான ஒழுங்குவிதிகள்" இன் 2 ஆவது ஒழுங்குவிதியினை இரத்துச் செய்தல்; மற்றும்

2. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு பீடிக்கும் மூன்று ரூபா (ரூபா 3.00) என்ற வீதத்தில் புகையிலை வரியினைத் தீர்மானித்தல் வேண்டும்.

இந்த கட்டளை 2025, ஏப்பிறல் 02 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருதல் வேண்டும்.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2025, ஏப்பிறல் 01.

EOG 04 - 0041